பிரிக்க ஏதாவது உத்தேசம் உண்டா ? ஏற்கெனவே சுலபமாக்குவதற்காக பிரிக்கப்படுகிற நிலைமை இருப்பதாலே இதையும் இரண்டாகப் பிரிக்க முடிவு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இன்னும் அந்த விவரங்களுக்குள்ளே அரசு செல்லவில்லை.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் மின்சார வாரியம் இன்னும் திறமையாகச் செயல்படுவதற்கு ஒரு ஆலோசனையை வைத்துள்ளார்கள். நான் கேட்க விரும்புவது, மதுரை, முகவை, தஞ்சை, வட ஆற்காடு போன்ற பெரிய மாவட்டங்களிலே ஒரு கண்காணிப்புப் பொறியாளர் மட்டும் இருப்பதால் நிர்வாகம் செய்வதிலே சங்கடங்கள் இருக்கின்றன. அவைகளையாவது கவனித்து உடனடியாக நிர்வாகத் திறமைக்காக இரண்டு பகுதியாகப் பிரிக்க முயற்சி செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தனிக் கேள்வி போட்டால் விவரம் தர இயலும்.

(முற்பகல் 9—10)

தமிழ்நாட்டில் எரிவாயு மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவும் திட்டம்.

* வினா எண் 701—திரு. கு. ரமணி : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மின்சார பற்றாக்குறையினால் உச்ச நேர மின் சப்ளை நெருக்கடி ஏற்படுவதை தடுக்க எரிவாயு மின் உற்பத்தி இயந்திரங்கள் சிலவற்றை நிறுவ மத்திய அரசிடம் அனுமதி கேட்கப்பட்டதா ?

(ஆ) ஆம், எனில் அது குறித்த விவரங்கள் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) ஒவ்வொன்றும் 50 மெகாவாட் திறன்கொண்ட ஆறு (6) கியாஸ் சுழலி மின் உற்பத்தி நிலையங்கள் ரு. 112·6 கோடி செலவில் நிறுவ மைய அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.

1982 ஏப்ரல் 1]

திரு. கு. ரமணி : இந்த 112 கோடி ரூபாய் திட்டம் என்பது ஒரு பெரிய திட்டம். இந்த மின் நிலையங்கள் எந்தெந்தப் பகுதிகளில் துவக்கப்படும் ? எந்தெந்த இடங்களை இதற்காக அரசு தேர்ந்தெடுத்துள்ளது ? கோவை மிகப் பெரியதொரு தொழில் மையமாக இருப்பதால, அடிக்கடி அங்கே மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படுவதால் அந்த மின்சாரத் தட்டுப்பாட்டைத் தீர்ப்பதற்காக அங்கும் ஒரு காஸ் டர்பைன் ஏற்படுத்த ஏதாவது செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இப்போது நாம் போட்டிருக்கிற திட்டத்தின்படி எண்ணூரில் இரண்டு 50 மெகாவாட்ஸ் திறன், பேசின் ப்ரிட்ஜில் ஒரு 50 மெகாவாட்ஸ், தூத்துக்குடியில் ஒரு 50 மெகாவாட்ஸ், மேட்டூரில் ஒரு 50 மெகாவாட்ஸ், மதுரையில் ஒரு50 மெகாவாட்ஸ் என்று திட்டம் போட்டு அனுப்பி இருக்கிறோம். ஆனால் இவை எல்லாயிடங்களிலும் வைக்க வேண்டும் என்று கூட அல்ல. சௌகரியமான ஒரு இடத்தில் வைத்து விட்டால் நமக்கு சில வினாடிகளில் மின்சாரம் உடனடியாகக் கிடைத்துவிடும். தமிழ்நாடு முழுவதற்கும் உறுதியான நிலைமைக்குக் கொண்டு வந்துவிட முடியும். ஆகவே எந்த இடத்தில் வைக்கிறோம் என்பது இதில் பெரிதல்ல. நல்ல இடமாகக் கிடைத்துவிட்டால் 300 மெகாவாட்ஸ் கூட ஒரேயிடத்தில் வைக்கலாம். சென்னை தான் லோட் சென்டர். ஆகவே இங்கே கூட வைக்கலாம். இன்னும் அனுமதி கிடைக்கவில்லை. எங்கே வைப்பது என்பது பிரச்சினை அல்ல.

திரு. கு. ரமணி : அமைச்சர் அவர்கள் எப்போதும் மத்திய அரசிடமிருந்து அனுமதி கிடைக்கவில்லை, அனுமதி கிடைக்கவில்லை என்று அடிக்கடி சொல்லி வருகிறார்கள். இதற்கு தமிழ்நாட்டிலுள்ள மக்கள் எல்லோருடைய ஆதரவையும் பெற்று இதற்கு முடிவு காண வேண்டும் என்பது ஒன்று. இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், கோவை ஒரு பெரிய தொழில் நகரம். அங்கே நூற்றுக்கணக்கான சிறு தொழிற்சாலைகள் உள்ளன. ஆனால் அங்கே அடிக்கடி மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படுவதால் அவற்றில் தொடர்ந்து உற்பத்தி நடக்க முடியாமல் பல யூனிட்கள் நிறுத்தப்படவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. ஆகவே அவர்கள் மின்சாரத் தேவையை அவசியம் பூர்த்தி செய்தாக வேண்டும். ஆகவே அவற்றிற்கு தடை இன்றி தொடர்ந்து மின்சாரம் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வை நான் அறிகிறேன். அந்த உணர்வின் அடிப்படையில்தான் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இது மத்திய அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதற்கு வேண்டிய காஸ், பெட்ரோலியம் பொருள் அமைச்சகம்

அனுமதி தரவேண்டும். அதற்குப் பிறகுதான் இந்த காஸ் டர்பைனை உருவாக்குவதற்கு மைய அரசின் அனுமதி கிடைக்கும். அது வந்தால்தான் இந்தப் பிரச்சினை தீரும்.

திரு. சோ. அழகர்சாமி : அமைச்சர் அவர்கள் எரிவாயு மின் உற்பத்தி நிலையங்கள் ஆறு இடங்களில் நிறுவ மத்திய அரசிடம் அனுமதி கோரி இருப்பதாகச் சொன்னார்கள். அந்த அனுமதியைத் துரிதமாகப் பெற என்ன தீவிர முயற்சியை அரசு மேற் கொண்டுடிருக்கிறது ? இப்போது ஒவ்வொரு இடங்களிலும் இரவு நேரங்களில் திடீரென்று ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் மின்சாரம் திடீரென்று நின்று விடுகிறது. அதனால் பலவித இக்கட்டான நிலைமைகள் ஏற்படுகின்றன. பம்ப்செட்களுக்கு மின்சாரம் மூன்று மணி நேரம் தொடர்ந்து கிடைக்காததால் பல மோட்டார்கள் தீய்ந்து போகின்றன. ஆகவே சீராக மின்சாரம் குறிப்பிட்ட நேரங்களில் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மைய அரசுக்கு கடிதங்கள் எழுதியிருக்கிறோம். அடுத்து நம் முதல்வர் அவர்கள் டெல்லிக்குச் செல்கிறபோது சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடத்தில் இவற்றை பேசி இந்த அனுமதியைக் பெற விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தற்போது ஏற்பட்டிருக்கிற மின் நெருக்கடியை ஓரளவு சமாளித்து வருகிறோம். இந்த ஏப்ரல் மாதத்தில் தூத்துக்குடியில் மூன்றாவது யூனிட், 210 மெகாவாட்ஸ் யூனிட் உற்பத்தி செய்யத் துவங்கும் என்று எதிர் பார்க்கிறோம். அதெல்லாம் வந்தால் ஓரளவு பிரச்சினையைச் சமாளிக்க முடியும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மின்சார உற்பத்தியைப் பெருக்குகின்ற வகையில் இப்படி எரி வாயு திட்டம், அதே போல் அனல் மின் திட்டம், புனல் மின் திட்டம் ஆகியவைகளுக்கு மைய அரசின் அனுமதி வேண்டுமென்று அனுப்பப்பட்டு எத்தனை திட்டங்கள் அனுமதிக்காகக் காத்துக்திருக்கின்றன ? அந்தத் திட்டங்கள் எவ்வளவு நாட்களாகத் தேங்கி இருக்கின்றன என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மின் வாரிய நிதிநிலை விவரம் நடத்திய பொழுது ஒரு அறிக்கை தரப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அதை மீண்டும் படித்தால் விவரம் கிடைக்கும்.